**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 74/2018**

2023 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 08–ம் நாள் செவ்வாய்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 08.08.2023 | தந்தை பெயர்: | கஞ்சமலை |
| பெயர்: | கருணாகரன்<br>(PW1 chief continuation) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | அல்லிவிளாகம் | சமயம்: | |
| சாதி: | | வயது : | 75 /2023 |
| தொழில்: | | | |

<u>**முதல் விசாரணை தொடர்ச்சி : 08.08.2023**</u>

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யபப்பட்டு முதன்மை விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.

எனது தாயார் 11.09.2009-ல் இறந்து போனதற்கான இறப்பு சான்றின் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எனது தகப்பனார் 19.08.1996-ல் இறந்துவிட்டார் அவரின் வாரிசு சான்றின் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.